RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை - ஒரு பார்வை

**கே. இரா. கமலாமுருகன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை - 600 004, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnanin Indhiya Samudhaya Varalatril Penmai – Oru Paarvai

**K.R. Kamalamurugan** [a, *]

[a] Department of Tamil, Queen Mary's College, Chennai – 600 004, Tamilnadu, India.

*Corresponding Author: kamalamuruganhari@gmail.com

Received: 03-11-2025
Revised: 24-02-2026
Accepted: 07-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

In the history of world literature, Tamil stands as a distinguished language enriched with a wide range of literary genres that have evolved in accordance with changing times. Among these, modern literary forms such as short stories and novels known for their compelling narrative techniques have greatly attracted readers. In this continuum, Rajam Krishnan, who carved a unique place for herself in the Tamil literary sphere through her numerous acclaimed novels, remains a significant figure. This article seeks to examine her work 'Indhiya Samudhaya Varalatril Penmai' and explore its thematic contributions.

**Keywords:** Rajam Krishnan, Feminity, Indian Social History, History of Women.

## முன்னுரை

தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனித்த இடத்தினைத் தக்கவைத்துக் கொண்டவர்களில் ஒருவர் இராஜம் கிருஷ்ணன். ஒரு பெண் படைப்பாளராகப் புதின வகைகளின் மூலம் பல்வேறு வாசகர்களை அடைந்தவர். இவரது எழுத்துக்களுக்குக் கூடுதலான சிறப்புகளும் உண்டு. பெண் எழுத்தாளர்கள் ஏதோ கதையும் கட்டுரையும், சமையலும் எழுத பேசக் கூடியவர்கள் என்கிற போக்கினை உடைத்துச் சமுதாயம் சார்ந்த சிந்தனைகளைக், குறிப்பாகப் பெண் சார்ந்த சிக்கல்களை அணுகுவதான படைப்புகளை அளித்தவர் இராஜம் கிருஷ்ணன். தனது கரிப்பு மணிகள் முன்னுரையில் "இலக்கியம் வெறும் பொழுது போக்குக்குக் கொரிக்கும் தீனிகள் ஆகிவிடக் கூடாது. அது மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத ஆரோக்கியமான சத்துணவைப் போல் சமுதாய உணர்வை மக்களிடையே ஊட்டுவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணமே என்னைப் புதிது புதிதான களங்களுக்கு இட்டுச் செல்கிறது" (கரிப்புமணிகள் - முன்) என்று எழுதுகின்றார்.

1948 இல் சுந்திர ஜோதி மூலம் புதின உலகில் இணைந்த அவர் வேருக்குநீர் புதினத்திற்காக சாகித்திய அகாடமி விருதும் பெற்றார். இது விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலைப் பேசியது. அலைவாய்க்கரையில் மீனவர் வாழ்வியலைப் பேசியது. குறிஞ்சித்தேன் நீலகிரி மலைப்பகுதியினை சார்ந்த படுகர் இன மக்களின் வாழ்வியலைப் பேசியது. வளைக்கரம் கோவா நகரன் பின் புலத்தினை காட்சியானது. கூட்டுக் குஞ்சுகள் தீப்பெட்டித் தொழிலில் முடங்கும் குழந்தைகளின் வாழ்வியலைப் பேசியது. கரிப்பு மணிகள் உப்பள மக்களின் வாழ்வியல் குறித்து அமைந்தது. மணலூர் மணியம்மையின் பெருமையினைப் பேசியது பாதையில் பதிந்த அடிகள். காலந்தோறும் பெண் கட்டுரைத் தொகுப்பில் பெண்கள் பின்னிலைக்குத் தள்ளப்படும் சூழலைப் பதிவு செய்தார். அதே வரிசையில் யாதுமாகி நின்றாய் அமைந்தது. பெண்ணுரிமை பேசவும், சமுதாயச் சிக்கலில் பெண் தள்ளப்படுவதான சூழல்களை விளக்கவும், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் சிக்கல்களை எடுத்துரைக்கவும், மத வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், இவற்றின் நன்மை தீமைகளக் கூறவும் தன் எழுத்துக்களை அமைத்துக்கொண்ட ஒரு பெண்ணியவாதியாக இருந்தும், வாழ்நாளின் இறுதியில் ஓர் அனாதையாகப் பலராலும் ஏமாற்றப்பட்ட மிகச் சாதாரணப் பெண்ணாகத் தன்னுயிர் நீத்தார் இராஜம்

கிருஷ்ணன். (இந்தக் கடைசி கால நிலையில் நான் கிழக்குத் தாம்பரத்தில் அவர் வீட்டருகில் இச்சூழலைக் கண்டுள்ளேன் என்பதான வேதனையுடன் இச்செய்தியினைப் பதிவு செய்கின்றேன்).

## இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை- ஒரு பார்வை

பல்வேறு புதினங்களுக்கிடையே சில கட்டுரைத் தொகுப்புகளையும் ராஜம் கிருஷ்ணன் எழுதியுள்ளார். குறிப்பாகப் பெண்ணியம் போற்றும் சூழல், தூற்றும் அவலம், என்பதான நிலைப்பாடுகளில் அக்கட்டுரைகளை அமைத்தளித்துள்ளார். அவ்வகையில் ‘இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை’ என்ற நூல் அமைந்துள்ளது. இந்நூலினுள் பன்னெடுங் காலத்திற்கு முந்தைய பெண்மையின் நிலைப்பாடு தொடங்கி இன்றைய சூழல் வரையிலுமான பல்வேறு நிலைகளைப் பேசுகின்றார்.

## ஆதித்தாய்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனித இனம் தோன்றி சிறிது சிறிதாகப் பகுத்தறிவுப் பாதையில் செல்லத் தொடங்கிய நாட்களிலேயே பெண் தன் தலைமைத்துவத்தினையும் ஆளுமையினையும் வெளிப்படுத்தியதன் மூலம் தாய்வழிச் சமூகமே வழக்கில் இருந்தமையினை இக்கட்டுரையில் தெளிவுபடுத்துகின்றார். “பெண் “தாய்” என்று அறியப் பெற்றாள். “ஜனி” உயிரைப் பிறப்பிப்பவள் என்ற மாண்புடையவளானாள். இவள் பிறப்பித்த உயிர்கள் “ஜனம்” என்று அறியப்படலாயினர். ஜனம் என்ற குழுவின் தலைவியாகத் தாய் விளங்கினாள். இவள் பேராற்றல் மிகுந்தவள். இவள் தலைமையில் மக்கள் வேட்டைக்குச் சென்றனர். காட்டுத் தீயை கைக்குள் பாதுகாக்கக் கற்றுக் கொண்டார்கள். இறைச்சியை உணவாகக் கொண்டபின் விலங்கு தோலைப் பதமாக்கித் தைத்து ஆடையாக்கினார்கள். மண்பாண்டம் செய்து பயன்படுத்தத் தெரிந்து கொண்டார்கள். மக்களுக்கு நோயினால் துன்பம் வந்துற்றபோது பச்சிலை மூலிகைத் திறன் கண்டார்கள். குழுவில் இவளே மக்களைப் பெறும் ஆற்றலைப் பெற்றிருந்த காரணத்தினால் ஆண் தலைமைத் தகுதிக்கு உரியவளாக வரவில்லை. குழுக்கள் பெண்களால் தாய்த் தலைவியாலேயே அறியப்பட்டனர். தாய் மக்கள் இந்த உறவுகளைத் தவிர வேறு உறவுகள் இந்தக் குழுக் காலத்தில் தோன்றியிருக்கவில்லை எனலாம். இந்தக் குழுக்களே, தாயாண்மைச் சமுதாயமாக வளர்ச்சி கண்டன” (இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, பக். 10 - 11) என்று விளக்கம் தருகின்றார். இதுவே உண்மை என்று வரலாறும் பேசுகின்றது.

இந்நிலை காலப்போக்கில் மாற்றம் கண்டது என்பதனை “இளமையில் தந்தை குமரிப்பருவம் வந்ததும் கணவன் பின்னர் முதுமையில் மைந்தன் என்று இவளுடைய காப்பாளராக இருந்தவர்கள் கால்களால் உதைத்துவிட்டு கைகளை மடக்கிக் கொண்டனர்” (காலந்தோறும் பெண், ப.182) என்று எடுத்துரைக்கின்றார்.

## புராணப் பெண்களின் நோக்கும் போக்கும்

இந்திய சமுதாய வரலாற்றில் பெண்களின் நிலைப்பாடு என்பதான கருப்பொருளில் பெண்களின் வாழ்வில் நேர்ந்த உயர்வையும், தாழ்வையும், துயரையும் சில கட்டுரைகளில் பழைமையான கதைகளின் கருக்கொண்டு எடுத்துரைத்திடுகின்றார் இராஜம் கிருஷ்ணன். அவ்வகையில் ஐவரின் தேவியான பாஞ்சாலி, சிதையில் விழுந்திட்ட சீதை, கற்பு நெறி பிறழ்ந்து தலை வெட்டப்பட்ட ஜமத்கினி என்ற ரிஷியின் பத்தினி ரேணுகா போன்ற பல பெண்களின் நிலைப்பாட்டை ஆய்கின்றார்.

ரேணுகாவின் முடிவில் ஆண் தாயாகக் குழுவுக்கு அடி பணியாத இளங்குமரிகள், கன்னிகள் “எல்லம்ம” தாசிகளாகச் சௌதத்திக் குன்றில் ஒரு சமுதாயத்தை உருவாக்கிய செய்தி அதிர்ச்சியானது ஆகும்.

ஐவர்க்கு தேவியாக உருவகித்தலே அவமானப் படுத்தப்பட்டதான செயல். உடன் துரியோதனனால் சபையில் நேர்ந்த அவமானம். இவ்விரண்டின் விடுதலை கருதி தன்னிலைத் தெய்வமாகத் தன்னை உருவகித்துச் சமர்ப்பித்துக் கொண்டவளே பாஞ்சாலி. இதனை “அநியாய ஆணாதிக்கத் தருமங்களை எதிர்த்துக் குரலெழுப்பிய சக்தி எழுச்சித் தெய்வமாக இன்னமும் பாமர மக்களின் துரௌபதையம்மன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்” (இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, ப. 41) என்று பதிவிடுகின்றார். சீதையினைப் “புதுயுகத்து நாயகி” (மேலது, ப. 45) என்று சுட்டி அவள் காட்டிற்குச் சென்றதும், அக்கதைப் போற்றப்படுவதும் இன்றும் தொடரும் ஆணாதிக்கத்தின் சான்று என்று விளக்குகின்றார்.

பெண்களின் துறவுநிலை ஏற்கப்படவில்லை. குறிப்பாகப் பௌத்தத்தின் அடிப்படை விதிகளில் இந்நிலை பின்பற்றப்பட்ட சூழலைத் துணை கிழப்பும் துறவறமும் கட்டுரையில் விளக்குகின்றார்.

## பெண்ணியம் பேசும் படைப்பாளர்

பெண்ணியம் என்பது இன்று பேசு பொருளாக உள்ளது. பிரேமா அவர்கள் "பெண்ணியம் என்ற சொல் தமிழுக்கும் புதுவரவாகும். 1889 ஆண்டு வரை பெண்களின் உணர்வுகளையும் அடிப்படையிலான போராட்ட உணர்வுகளையும் குறிப்பதற்கு உமனிசம் (womanism) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. 1890-இல் பெமினிசன் என்று மாற்றம் பெற்றது" (பெண்ணியம், ப. 1) என்று விளக்குகிறார்.

பூங்கொடி அவர்கள் "சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒழுக்க முறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணிய வாதம்" (தலித் பெண்ணியம், ப.19) என்று தெளிவுபடுத்துகின்றார்.

பெண்ணியம் என்ன மன உணர்வைத் தந்துள்ளது இன்றைய சூழலில் என்பதனைப் பொன்மணி வைரமுத்து "படித்திருந்தால் பரவாயில்லை என்று பாமரப் பெண்கள் சிந்திக்க படிக்காமலிருந்தாலவது பரவாயில்லை என்று படித்த பெண்கள் சிந்திக்க பெண்கள் இங்கே தவிப்புத் தீவுகள்" (பொன்மணி வைரமுத்து கவிதைகள், ப. 53) என்று பதிவிடுகிறார்.

படைப்பாளர் இராஜம் கிருஷ்ணன் தன் இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை நூலில் முதலிலேயே மகளிர் நிலைகளைக் காட்டும் விளக்கப்பாடல்கள் மூன்றினை அமைத்துள்ளார். சங்கப் பெண் புலவர்கள் மற்றும், ஆண்டாள், அச்சுமா தேவி, காரைக்கால் அம்மையார் என்ற ஒரு வரிசையிலும் அன்னை கஸ்தூரிபாய், இராணி மங்கம்மா, ஜான்சி ராணி, ரஸியா சுல்தான், இந்திரா காந்தி போன்ற பெண்களை ஒரு வரிசையிலும் நிறுத்தி அவர்களின் சிறப்புகளையும், வாழ்வியல் சிக்கல்களையும் எடுத்துரைத்து, "இந்திரா மாறிவரும் இந்தியப் பெண்மைக்கு போரடும் பெண்மைக்கும் ஒரு வலுவான முன் மாதிரி என்றால் தவறில்லை. கஸ்தூரிபாயின் மரபுப் பெண்மையிலிருந்து வெளிவந்து தன்னை இனம் கண்டுகொள்ள முயன்று வெற்றியினை முழுமையாகக் காண முடியவில்லை. எனினும் இந்திரா, இந்தியப் பெண்களின் வரலாற்றில் தனக்கென்று ஓர் இடம் தேடிக்கொண்ட அரிய பெண்மணியாம்" (இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, ப.185) என்று பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

பெண்ணியம் என்பது இன்றும் பேசு பொருளே. அதற்கான அடிப்படை சிக்கல்கள் பல உள்ளன. சமுதாய அக்கறையும் பெண்ணின் மேம்பாடும் விரும்பிய பெண் படைப்பாளர் இராஜம் கிருஷ்ணன் "இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை" என்ற நூலில் அன்றும் இன்றுமான பெண்களின் வாழ்வியலையும் மனித சமுதாயத்தின் சட்ட திட்டங்களையும் ஒட்டியதான வகையில் பெண் மேம்பாட்டிற்குச் சமுதாய அக்கறை அவசியம் என்பதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## References

Dalit Penniyam, Kalachuvadu Pathipagam, Nagarcoil.

Ponmai Vairamuthu, Ponmai Vairamuthu Kavithaigal, Surya Pathipagam, Chennai.

Prema, Penniyam, Paari Nilaiyam, Chennai.

Rajam Krishnan, Indhiya Samuthaya Varalatril Penmai, Thagam Pathippagam, Chennai.

Rajam Krishnan, Kaalanthorum Pen, Kalachuvadu Pathipagam, Nagarcoil.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License